सत्यमेव जयते

# இந்தியத் துணைத்தூதரகம்

## யாழ்ப்பாணம்

## ஊடக அறிக்கை

**வடமாகாணத்தில் வசிக்கும் / பணி புரியும் இந்திய பிரஜைகளுக்கான “ஓப்பின் ஹவுஸ்” (Open House) கலந்துரையாடல்**

யாழ்ப்பாணத்திலுள்ள இந்திய துணைத் தூதரகமானது வடமாகாணத்தில் வசிக்கும் / பணிபுரியும் இந்தியப் பிரஜைகளுக்கு தனது சேவைகளை வெளிப்படைத் தன்மையாகவும் மேலும் கிடைப்பனவாகும் வகையிலும் மாற்றும் முயற்சியில் தொடர்ச்சியாக ஈடுபட்டு வருகின்றது. அந்த முயற்சியின் அங்கமாக இந்திய துணைத் தூதரகம் ஜூன் மாதம் 3 ஆம் திகதி சனிக்கிழமை முற்பகல் 11.00 – 12.00 மணி வரையான காலத்தில் இல 14, மருதடி ஒழுங்கை, நல்லூர், யாழ்ப்பாணம் முகவரியிலுள்ள இந்திய துணைத் தூதரகத்தில் தனது செயற்பாடுகள் தொடர்பில் பொதுமக்கள் அறிந்து கொள்ள விசேட விளக்கமளிக்கும் கலந்துரையாடல் நிகழ்வொன்றை நடத்துகின்றது.

இதன் போது விசா, கடவுச்சீட்டு, இந்திய வெளிநாட்டு பிரஜாவுரிமை, மற்றும் தூதரக சேவைகள் உள்ளடங்கலான அனைத்து விடயங்கள் தொடர்பிலும் கலந்துரையாடப்படவுள்ளது.

யாழ்ப்பாணத்துக்கான இந்தியத் துணைத்தூதுவர் தலைமையில் நடைபெறவுள்ள மேற்படி நிகழ்வில் கலந்து கொள்வதற்கு அக்கறையுள்ள வடமாகாணத்தில் வசிக்கும் / பணி புரியும் இந்திய பிரஜைகள் அனைவருக்கும் இந்தியத் துணைத் தூதரகம் அழைப்பு விடுத்துள்ளது.

23 May 2017